பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 11 வியாழக்கிழமை 26.11.2020 கதிர் 252

## முகப்புத்தகக் குறிப்பில் மிக அவதானம் தேவை!

### மட்டக்களப்பில் 19 பேர் கைது

முகப் புத்தகங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம் மற்றும் புலிகளின் இலச்சினையை சேர்த்து குறிப்பு வெளியிட்ட குற்றத்தின் பெயரில் மட்டக்களப்பில் 19 தமிழ்

2

## மரக்கறிச் சந்தையில் 32 பேருக்குக் கொரோனா; முற்றாக முடங்கியது அக்கரைப்பற்றுப் பிரதேசம்



### கிழக்கிலும் கொத்தணி ஏற்படுமோ எனச் சந்தேகம்

(அம்பாறை மாவட்ட நிருபர்கள்)

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று மரக்கறிச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இன்று மாலை 32 பேர் கொரோனோ வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள பகுதிகள் இன்று

2

### மாவீரர் நாள் நினைவேந்தலையொட்டி

## தமிழர் தாயகத்தில் பாதுகாப்பு படுதீவிரம்! மூலைமுடுக்கெல்லாம் படைகள் குவிப்பு!!



கொழும்பு, நவம்பர் 26

தமிழினத்தின் விடுதலைக்காக - தாயக தேசத்தின் மீட்புக்காக வித்தாகிப்போன வீரமறவர்களை அஞ்சலிக்கும் மாவீரர் நாள் நினைவேந்தலையொட்டி தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் வழமைக்கு மாறாகப் பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர். மூலைமுடுக்கெல்லாம் அரச படைகளின் பாதுகாப்பு தீவி ரப்படுத்தப்பட்டுள்ளது.

2

## கிளிநொச்சியில் ஆயிரம் பேர் வரை தனிமைப்படுத்தலில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.26

கிளிநொச்சி மாவட்டத்தில் வேகமாகப் பரவும் கொரோனாத் தொற்றுக் காரணமாக இதுவரை 250இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரம் பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையோடு இன்றும் பலருக்கு பி.சி.ஆர் பரிசோதனை இடம்பெற்றது.

2

## யாழில் புயல் நிலையால் ஐயாயிரம் பேர் பாதிப்பு

(ந.லோகதயாளன்)


யாழ்ப்பாணம்,நவ.26

யாழில் நிலவும் சீரற்ற கால நிலை, புயல் காரணமாக யாழ்ப்பாணத்தில் இதுவரை 1,431 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 31 பேர் பாதிப்படைந்துள்ளனர் என யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர்

2

## தலைவர் பிரபாகரனுக்கு நாடாளுமன்றில் வாழ்த்து

### தெரிவித்தது தமிழ்க் கூட்டமைப்பு



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் இன்று தெரிவித்துள்ளது.

வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் இன்று கலந்துகொண்டு உரையாற்றிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

2

## யாழில் வெள்ளத்தில் மூழ்கியது பதிவாளர் நாயகம் திணைக்களம்



யாழ் மாவட்ட செயலகத்தில் இயங்கும் பதிவாளர் நாயகம் திணைக்கள அலுவலகம் நேற்று இரவு பெய்த கடும் மழையின் தாக்கத்தினால் வெள்ளத்தில் மூழ்கியது. நான்கு மாடிகளைக்கொண்ட இதன் கட்டடத்திற்குள் மழை நீர் உட்புகுந்து அலுவலகம் முழுவதும் வெள்ள நீரால் மூழ்கியது.

2

## பருத்தித்துறை நீதிமன்றமும நினைவேந்தலுக்குத் தடை!!

(எஸ்.நிதர்ஷன்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நியாயதிக்கத் துக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு மாவீரர் நாளன்று ஒன்றுகூடுவதோ அல்லது மக்களை

2

## மாங்குளத்தில் வெடிப்புச் சம்பவம் பொலிஸ், இராணுவம் விசாரணை

முல்லைத்தீவு, நவ. 26

முல்லைத்தீவு, மாங்குளம் கற்குவாரிப் பகுதியில் வெடிப்புச் சம்பவம் ஒன்று இன்று இடம்பெற்றுள்ளது.

தனியார் காணியில் காணப்பட்ட வெடிபொருளொன்று வெடித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெடிப்புச் சம்பவத்தை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸாரும், இராணுவத்தினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வெடிப்புச் சம்பவத்தால் எவருக்கும் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் கொழும்புக்கு வருகின்றார்

இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் முக்கியமான விஜயமொன்றை மேற்கொண்டு நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு வருகின்றார்.

இந்தியா - இலங்கை - மாலைதீவு முத்தரப்பு பாதுகாப்பு மாநாட்டில் பங்குபற்றவே அவர் இலங்கை வரவுள்ளார்.

கொழும்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைச் சந்திக்கவுள்ள அவர், இந்தியப் பிரதமரின் முக்கிய செய்தியொன்றையும் எடுத்துவருவாரென உயர்மட்ட இந்திய அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியத் தேசிய பாதுகாப்பு

2

## யாழ். பல்கலை மருத்துவபீட மாணவன் மரணம்;

### சி.சி.ரி.வி. கமரா, கைத்தொலைபேசி தரவுகளை சேகரிக்கப் பொலிஸாருக்கு நீதிமன்றம் பணிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன் சிதம்பரநாதன் இளங்குன்றனின் மரணம் தொடர்பில் அவர் தங்கியிருந்து வீட்டைச் சுற்றியுள்ள சி.சி.ரி.வி. கமராக்களின் பதிவுகளையும், அவர் பாவித்த கையடக்கத் தொலைபேசியின் உரையாடல் பதிவுகளையும்

2



## கொரோனா ஆபத்தால் இழுத்து மூடப்பட்டன கல்முனை வலயத்துக்குட்பட்ட பாடசாலைகள்



கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத் துப் பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

ஒரு வார காலத்துக்குக் இந்தப் பாடசாலைகள் மூடப்படடிருக்கும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாடசாலை மீள திறக்கப்படும் திகதி விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப் பிட்டார்.

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையை அடுத்தே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

2

# மட்டக்களப்பு மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லம்; நினைவேந்தல் தடையை உறுதிப்படுத்தியது நீதிமன்று

மட்டக்களப்பு மாவட்டம், கொக்கட்டிச்சோலை - மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் விளக்கேற்றி நினைவுகூருவதைத் தடுக்கும் வகையில் கொக்கட்டிச்சோலை பொலிஸாரினால் பெறப்பட்ட தடை உத்தரவை நீக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கைத் தள்ளுபடி செய்து நினைவேந்தல் தடையை நீதிமன்றம் மீண்டும் உறுதிப்படுத்தியது.

மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் விளக்கேற்றி நினைவு கூருவதைத் தடுக்கும் வகையில் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற கட்டளை கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் கடந்த 20ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதி தலைவருமான பா.அரியநேத்திரனின் வீட்டுக்கு சென்று வழங்கப்பட்டிருந்தது.

அதில் இம்மாதம் 21ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வரை மாவடிமுன்மாரி துயிலும் இல்லத்தில் அரியநேத்திரனோ - அவர் கட்சி சார்ந்தவர்களோ - ஏனையோர்களோ அவ்வாறான நினைவேந்தல் நிகழ்வு நடத்தவும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரின் பிறந்த நாளைக் கொண்டாடவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

புதுத் தொல்லைகளைத் தவிர்த்தல், தணித்தல் என்கின்ற குற்றவியல் சட்டக்கோவையின் 106:01 பிரிவின் கீழ் இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலை பொலிஸாரினால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனுக்கு வழங்கப்பட்ட தடை உத்தரவை நீக்கக் கோரி கடந்த 24ஆம் திகதி மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் அரியநேத்திரன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி பே.பிரேம்நாத், சட்டத்தரணி சயந்தன் உட்பட 27 சட்டத்தரணிகள் அன்று ஆஜராகியிருந்தனர்.

குறித்த வழக்கை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.றிஸ்வான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றிருந்ததுடன் பொலிஸார், குறித்த நினைவேந்தல் நிகழ்வு விடுதலைப்புலிகளை மீளுருவாக்க மேற்கொள்ளப்படும் செயற்பாடு எனவும், கொரோனா அச்சுறுத்தல் காலத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை எவரும் மீறவே முடியாது எனவும் காரணங்களை முன்வைத்து வாதங்களை முன்வைத்திருந்தனர்.

இந்தநிலையில், குறித்த வழக்கை இன்று வரையில் நீதிமன்றம் ஒத்திவைத்திருந்த நிலையில் மீண்டும் வழக்கு இன்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிவான் ஏ.சி.றிஸ்வானால் ஏழு பக்கங்கள் கொண்ட தீர்ப்பு அறிக்கை வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து தடை உத்தரவை நீக்குவதற்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டு வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

## தமிழர் தாயகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தீவிரம்! ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களிலும் நாளை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளைப் பொதுவெளியில் நடத்த அந்தந்த மாவட்ட நீதிமன்றங்களினால் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பொலிஸாரின் வேண்டுகோளின் பிரகாரம் இந்தக் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், வடக்கு, கிழக்கில் பொலிஸாரினதும் இராணுவத்தினரினதும் பிரசன்னம் அதிகரித்துக் காணப்படுகின்றது. பல்வேறு பகுதிகளிலும் ஏற்கனவே இருந்த இராணுவச் சோதனைச் சாவடிகளை விட விசேடமாக பொலிஸ் சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அரச படைகளின் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராகத் தமிழ் அரசியல்வாதிகள் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

மாவீரர்களைப் பொதுவெளியில் நினைவுகூரத் தடை விதித்தாலும் தமிழ் மக்கள் தத்தமது வீடுகளில் நாளை மாலை 6.07 மணியளவில் ஈகைச்சுடர்களை ஏற்றி வீரமறவர்களை அஞ்சலிப்பார்கள் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## பருத்தித்துறை நீதி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று திரட்டி நிகழ்வுகளை நடத்துவதோ முடியாது என்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் இன்று தடைக் கட்டளை வழங்கியது.

மாவீரர் நாள் நினைவேந்தலைத் தடை செய்யுமாறு கோரி பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் நெல்லியடி ஆகிய 3 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளால் தனித்தனியாக விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது.

அதில் பிரதிவாதிகளாக முன்னர் தாக்கல் செய்யப்பட்டு மீளப்பெறப்பட்ட விண்ணப்பத்தில் உள்ளவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டன.

அந்த விண்ணப்பம் மீதான கட்டளை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தால் இன்று நண்பகல் வழங்கப்பட்டது.

## யாழ். பல்கலை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீற்றர் போல் இன்று உத்தரவிட்டார்.

கடந்த 17ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் கிழக்கு, வன்னியசிங்கம் வீதியில் உள்ள விடுதியில் தங்கி நின்று கல்வி கற்று வந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன் சிதம்பரநாதன் இளங்குன்றன் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு இன்று யாழ். நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது. இதன்போதே நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார் என்று பாதிக்கப்பட்ட மாணவனின் சார்பில் மன்றில் ஆஜராகிய சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்தார்.

இளங்குன்றனின் மரணம் தொடர்பில் பலத்த சந்தேகங்கள் இருக்கின்றன என்று உறவினர்களால் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், இளங்குன்றனின் சகோதரன் நீதி கோரி ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோருக்குக் கடிதம் ஒன்றையும் சில நாட்களுக்கு முன்னர் அனுப்பியிருந்தார்.

இவ்வாறான நிலையில் யாழ். நீதிவான் நீதிமன்றில் இன்று நடைபெற்ற குறித்த வழக்கில் மருத்துவபீட மாணவனின் மரணத்தில் சந்தேகம் இருக்கின்றது எனவும், அது தொடர்பான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மாணவனின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி க.சுகாஷ் மன்றில் தெரிவித்தார்.

குறித்த வழக்கை விசாரித்த நீதிவான், மாணவன் வசித்த வீட்டைச் சுற்றியுள்ள இடங்களில் சி.சி.ரி.வி. கமராக்கள் இருந்தால் அதன் ஒளிப்பதிவை எடுக்குமாறும், அதேவேளை குறித்த மாணவனின் கையடக்கத் தொலைபேசி பதிவுகளையும் ஆராய்ந்து எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## கொரோனா ஆபத்தால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, கொரோனா அச்சம் காரணமாக கண்டி நகரிலுள்ள 45 பாடசாலைகள் நேற்றிலிருந்து மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியத் தேசியப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசகர் பதவி என்பது மத்திய அமைச்சர் பதவிக்கு நிகரானது என்பதும் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான முக்கிய தீர்மானங்களை பிரதமர் சார்பில் அப்பதவியில் இருப்பவரே எடுப்பார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை மாலைதீவின் பாதுகாப்பமைச்சரும் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு வருகிறார்.

## யாழில் வெள்ளத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளம் உட்புகுந்தமை குறித்து அறிந்த யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் ஆகியோர் நேரடியாக அங்கு சென்று அலுவலகத்தினைப் பார்வையிட்டனர்.

அதன் பின் கருத்து தெரிவித்த யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் -

இந்த அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்தமானது எதிர்பார்க்காத ஒரு விடயம். எனினும் உடனடியாக பொறியியலாளர் அழைக்கப்பட்டு கட்டடத்தில் ஏற்பட்டுள்ள சேதத்தை விரைந்து திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது

எனினும் இந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. எனினும் அலுவலகம் முழுவதும் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் அலுவலக செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. - எனத் தெரிவித்தார்.

## யாழில் புயல் நிலையால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச்செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் மேலும் விவரம் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணத்தில் இன்று அதிகாலை அதிக மழை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு சில பகுதிகளில் காற்றின் தாக்கமும் காணப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையில் இதுவரை 1,431 குடும்பங்களைச் சேர்ந்த 5,031 பேர் பாதிப்படைந்துள்ளனர். இதுவரை இரண்டு வீடுகள் முழுமையாக சேதமடைந்தமையோடு 481 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிக சேதமடைந்த பிரதேசமாக பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி பகுதிகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. - என்றார்.

## மரக்கறிச் சந்தையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாள் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்தார். மரக்கறிச்சந்தையில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதால் பேலியகொட கொத்தணி போன்று கிழக்கிலும் கொத்தணி ஏற்படுமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது எனவும் அவர் கூறினார்.

அக்கரைப்பற்று நகரிலுள்ள மரக்கறிச் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த 22 பேருக்கு நேற்று எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பிரிசோதனையிலேயே 10 பேர் கொரோனா தொற்றுடன் கண்டறியப்பட்டனர். அவர்கள் உடனடியாகக் கொரோனாத் தொற்றுக்காகச் சிகிச்சையளிக்கப்படும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதையடுத்து குறித்த மரக்கறிச் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஏனையவர்களிடம் இன்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பிரிசோதனையில் 22 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று மரக்கறிச் சந்தையில் இதுவரை 32 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தம்புள்ளை சந்தைக்கு மரக்கறிக் கொள்வனவுக்காகச் சென்ற நிலையில் இவர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

## கிளிநொச்சியில் ஆயிரம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை இனம் காணப்பட்ட 6 கொரோனா நோயாளிகளின் வர்த்தக நிலையங்கள், அங்கு பணியாற்றியவர்களின் குடும்பங்கள், வீடுகள், அயலவர்கள், அவர்கள் நடமாடிய இடங்களைச் சேர்ந்தோர் எனத் தற்போது அதிகரித்த எண்ணிக்கையானோர் இனம் காணப்பட்டு தனிமைப் படுத்தப்படுகின்றனர்.

இதன் காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தனிமைப் படுத்தலில் உள்ளமையோடு இவர்களில் 156 பேரிடம் இன்று மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதன் முடிவுககள் இன்று இரவு கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தலைவர் பிரபாகரனுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தலைவர் பிரபாகரனுக்கு 66 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக் கூறினார்.

மகாவலி திட்டத்தின் எல் வலயத்தின் கீழ் வடபகுதி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சுட்டிக்காட்டிய சார்ள்ஸ் எம்.பி., அவ்வாறு சிங்கள அரசால் பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை முன்கூட்டியே அறிந்து தான் தலைவர் பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார் எனவும் மேலும் தெரிவித்தார்.

## முகப்புத்தகக் குறிப்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் இன்று கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பகிரங்கமாக முகப்புத்தக கணக்குகளைப் பாவிப்போர் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கும்படியும் தற்போதைய கள நிலைவரங்களைப் புரிந்து கொண்டு செயற்படும் படியும் தமிழ் சட்ட வட்டாரங்கள் தமிழ் மக்களை எச்சரித்துள்ளன.

**வேலைக்கு ஆள் தேவை**

**நோயாளர் நலன்புரிச் சங்கம்**
**ஆதார வைத்தியசாலை**
**தெல்லிப்பழை.**

**நோயாளரைப் பராமரிப்பதற்கு ஆண்/பெண் இருபாலாரும் தேவை.**

**லயன் சி.ஹரிகரன்**
**077 223 0535**
**077 900 5856**

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ஓர்மம் பேணுவோம்!

மாவீரர் தினத்தை ஒட்டி பொது நிகழ்வுகளை நடத்துவதற்கும், நினைவேந்தல் செய்வதற்கும் பல்வேறு நீதிவான் நீதிமன்றங்களும் தடை விதித்திருக்கின்றன.

பொதுநிகழ்வாக இரத்ததானம், மரநடுகை போன்ற சமுதாய நன்னோக்கு நடவடிக்கைகளை நாளை மேற்கொள்ளவும் தடை விதிக்கப்படக் கூடும். அத்தகைய நிகழ்வுகளில் இராணுவ, பொலிஸ் பாய்ச்சல் இடம்பெறலாம்.

அவ்வளவு தூரத்துக்கு சீற்றம் கொண்டு கங்கணம் கட்டி நிற்கின்றது பௌத்த, சிங்களப் பேரினவாத அரசு.

ஆனாலும் கூட, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத் தீர்ப்பின்படி – அங்கு பொலிஸாரும் எதிராளிகளும் நீதிமன்ற ஏற்பாட்டில் கண்ட இணக்கத்தின் பிரகாரம் – கொவிட் தொற்றுத் தொடர்பான உரிய முன்னாயத்த நடவடிக்கைகளுடன் சுகாதார அதிகாரிகளின் சம்மதத்துடன் நினைவேந்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

என்றாலும் கூட, சுகாதார அதிகாரிகள் மூலம் அங்கும் தடை விதிக்கச் செய்ய பேரினவாத அரசு நிச்சயமாகத் தயாராக இருக்கும்.

மாவீரர் தின நினைவேந்தல் என்பது பயங்கரவாதிகளான புலிகளை நினைவு கூரும் நடவடிக்கை என்ற சிங்கள அரசின் கருத்து நிலைப்பாட்டுக்கு மாறாகத் தீர்ப்புக் கொடுக்க – கட்டளை வழங்க – முடியாத நிலையில் நீதிமன்றங்கள் இருந்தாலும், தனித்தனியே ஒவ்வொருவரும் தம் உறவுகளை நினைவு கூர்வதற்கு இருக்கும் அடிப்படை உரிமையை அவை மறுக்கவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இது போன்ற நெருக்கடிகள், அழுத்தங்கள் இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்குப் புதியவையல்ல.

தங்களுடைய தனித்துவமான இறையாண்மையை, ஆளுமையை எப்போது தமிழர்கள் அந்நியர்களிடம் தொலைத்தார்களோ, அன்று தொடக்கம் இத்தகைய பல்வேறு நெருக்குவாரங்களை, அழுத்தங்களை அவர்கள் காலங்காலமாக எதிர்கொண்டு வருகின்றனர். அதுதான் நமது இனத்தின் சரித்திரப் பட்டறிவு.

ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்திலும் வடக்கு, கிழக்கு மக்கள் தமது மதத்தை, பண்பாட்டை, வழக்காறுகளை, கொண்டாட்டங்களை, பொது நிகழ்வுகளை பகிரங்கமாக நடத்த முடியாமல் அடக்கி, ஒடுக்கப்பட்டனர்.

ஆனால், அந்த அடக்கு முறைகளினால் அவர்கள் தங்கள் மதத்தையோ, பண்பாட்டையோ, வழக்காறுகளையோ தொலைத்து விடவில்லை. பகிரங்கமாகச் செய்ய முடியாத வழிபாட்டையும், பண்பாட்டுப் பழக்க வழக்கங்களையும், வழக்காற்று ரீதியான நடவடிக்கைகளையும் அவர்கள் வீடுகளுக்குள் உணர்வுபூர்வமாக நடத்தினர். அதன் மூலம் அவை தொடர்பற்றுத் தூண்டுபடாமல், அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கூடத் தொடரச்செய்து நிலைபெற வைத்தனர்.

இன்றைய பௌத்த, சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பு ஆட்சி இப்போது செய்யும் அட்டகாச – அதிகார – தோரணை முறையைத்தான் அன்றைய ஒல்லாந்த அதிகார பீடமும் செய்தது.

ஒல்லாந்த ஆட்சி அதிகாரம் மூலம் ஆங்காங்கு சில மாற்றங்கள், பேதங்கள் ஏற்பட்டு அவை நிலைபெற்றனவாயினும் தமிழ் மக்களின் தனித்துவல் பண்பாடும், வாழ்வு முறையும், பண்பியல்பும் மாறாமல் தொடரவே செய்தன.

ஒல்லாந்தரைப் போல, இப்போது பௌத்த, சிங்கள ஆக்கிரமிப்பு ஆட்சிப் பீடம் தமிழர்களின் நினைவேந்தல் உரிமையை மறுத்து மேலதிகாரம் பண்ணி நிற்கின்றது. பொலிஸ் மூலமும் தனது ஆக்கிரமிப்புப் படைகள் மூலமும் மக்களின் ஒன்று கூடி துயர் பகிரும் அடிப்படை உரிமையையும் பறித்து நிற்கின்றது.

அதன் காரணமாக அந்த நினைவேந்தல் உரிமையை நாம் விட்டுக் கொடுத்து விலகிவிடக்கூடாது.

உரிமைக்காகப் போராடிய போராளிகளைக் கொன்றொழித்த படையினரும் சிங்கள ஆட்சியாளர்களும் பதினொரு ஆண்டுகள் கழித்தும் அந்தப் போராளிகளுக்காக ஒன்று கூடி நினைவேந்தும் உரிமையைக் கூட மறுக்கும் கொடூரவாதிகளாகவே உள்ளனர் என்ற ஆவேசம் – சீற்றம் – கோபம் – ஒவ்வொரு தமிழனினதும் மனதில் கனன்று கொண்டிருக்க வேண்டும்.

இன்றைய கட்டத்தில் இதற்கான பதிலை தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரன் பாணியில் வழங்கக் கூடியவர்களாக தமிழர்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அந்த நினைவேந்தல் தடை என்ற அடவாடித்தனமான, அடக்குமுறைப் போக்கிலான பௌத்த, சிங்கள மேலாதிக்கத்துக்கு எதிரான ஓர்மம் ஒவ்வொரு தமிழனின் மனதிலும் ஆழமாகப் பதிந்து நிற்கும்; நிற்கின்றது.

அதனை, நாளை மாலை தனித்தனியாக வீட்டில் விளக்கேற்றி, நம் வீரமறவர்களை நினைவேந்தி, புதுப்பித்து மனதில் பேணிக் கொள்வோம்.

உரிய காலத்தில், உரிய வடிவத்தில் நாம் அதனை ஒன்றுபட்டு வெளிப்படுத்த வேண்டி வரும். பல தளங்களில், பல மட்டங்களில் அந்த வாய்ப்பு நமக்குக் கிட்டும். அப்போது அதனை ஆக்ரோஷமாகக் காட்டுவோம்.

அத்தகைய ஒரு தளம் அல்லது வாய்ப்பு வரும் மார்ச்சில் ஜெனீவாவில் வருகின்றது. காத்திருப்போம்.

# விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதி கலைஞர்களுக்கு!

## பிரதமரின் ஆலோசனைக்கமைய



சுபீட்சத்தின் நோக்கு கொள்கையின் கீழ் கலைஞர்களுக்கு விபத்து மற்றும் மருத்துவக் காப்புறுதி பெற்றுக்கொடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய, இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக மேடை நாடகத் துறையினருக்கு காப்புறுதி பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தை 2020 ஆம் ஆண்டிலேயே யதார்த்தமாக்கும் வகையில் அறிமுகப்படுத்தும் இந்தக் காப்புறுதித் திட்டம் பிரதமரின் மேற்பார்வை மற்றும் அறிவுறுத்தலுக்கமைய முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும், தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் அறிவுறுத்தலுக்கமைய டவர் மண்டப அரங்க அறக்கட்டளையினால் 'பிரேக்ஷா ரக்ஷன' என்ற இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருகிறது.

இதன்படி, திறமை மிக்க மேடை நாடகத் துறையில் நாடக திரைக்கதை, இயக்கம், தயாரிப்பு, நடிப்பு, வசனம், பின்னணி வடிவமைப்பு, ஆடை வடிவமைப்பு, மேடை அமைப்பு, இசையமைப்பு, மேடை நிர்வகிப்பு உள்ளிட்ட பிரிவுகளில் ஈடுபடும் 35 வயதுக்கும் 75 வயதுக்கும் இடையிலான நாடகக் கலைஞர்களுக்கு காப்புறுதி வழங்கப்படும்.

இந்தக் காப்புறுதித் திட்டத்துக்கென காப்புறுதி பயனாளர்களிடமிருந்து எவ்வித தொகையும் அறிவிடப்படாமை சிறப்பம்சமாகும். இந்தக் காப்புறுதித் திட்டத்தில் நாடகத் துறையில் தங்களது திறமை மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

தேசிய மட்டத்தில் விருது பெற்றவர்கள் மற்றும் விண்ணப்பிக்கும் திகதிக்கு ஐந்து வருடங்கள் தொடர்ந்து நாடகத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள், விண்ணப்பத் திகதிக்கு 10 வருடங்களுக்குக் குறையாது நாடகத்துறையில் ஈடுபட்டவர்களும் இந்தக் காப்புறுதித் திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும்.

'பிரேக்ஷா ரக்ஷன' காப்புறுதிக்கான விண்ணப்பங்களை www.towerhall.lk என்ற வலைத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 2020 டிசெம்பர் 11 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப அரங்க அறக்கட்டளை, இல. 123, சவ்சிறிபாய, விஜேராம மாவத்தை, கொழும்பு – 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# பயங்கரவாதிகளின் தினங்களை கொண்டாடுவது சட்டப்படி குற்றம்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இப்படி வியாக்கியானம்

பயங்கரவாதிகளின் தினங்களைக் கொண்டாடுவது குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றச் செயற்பாடாகும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் 1999 ஆம் ஆண்டிலேயே இந்த இரு தினங்களையும் மாவீரர் தினமாகப் பெயரிட்டிருந்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த தினத்தையே இவர்கள் இவ்வாறு கொண்டாட முயற்சித்து வருகின்றனர் என அவர் கூறியுள்ளார்.

முல்லைத்தீவில் மாவீரர் நாள் நினைவு கூரலுக்கான தடையை நீக்கக் கோரி விண்ணப்பம் செய்தமையை சுட்டிக்காட்டியே அஜித் ரோஹண இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், நீதிமன்ற உத்தரவுக்குப் புறம்பாக எவரேனும் செயற்பட்டால் அவர்களைக் கைதுசெய்து, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியும் என அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

# உப்பு உற்பத்தி நிறுவனத்துள் கடத்தல் மஞ்சள் பதுக்கல்!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.27

இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டதாக நம்பப்படும் மஞ்சள், புத்தளத்தில் உப்பு உற்பத்தி நிறுவனத்திற்குள் மறைத்து வைத்திருந்த சமயம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட மஞ்சள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக கடற்படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் புத்தளம் 2 ஆம் கட்டைப் பகுதியில் உள்ள உப்பளத்தில் இருந்து 25 மூடை மஞ்சள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றிய 25 மூடைகளிலும் மொத்தமாக ஆயிரத்து 16 கிலோ மஞ்சள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவை சட்ட நடவடிக்கைக்காக பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 116 பேர் நாடு வந்தடைந்தனர்!

கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 116 இலங்கையர்கள் இன்று (வியாழக்கிழமை) காலை நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி இன்று அதிகாலை 12 மணியளவில் 42 இலங்கையர்கள் அபுதாபியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அத்துடன் கட்டார் தோஹாவிலிருந்து 39 இலங்கையர்களும் ஓமான், மஸ்கட்டிலிருந்து 35 இலங்கையர்களும் இன்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அவர்களை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதுச்சேரியில் எந்தப் பாதிப்பும் நிவர் புயலால் ஏற்படவில்லை!



வங்கக் கடலில் உருவான நிவர் புயல் புதுச்சேரியை இன்று (வியாழக்கிழமை) அதிகாலை கரையை கடந்துள்ள நிலையில் பெரியளவில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என அந்த மாநில அரசு அறிவித் துள்ளது.

இருப்பினும் காலை முதல் காற்றும் லேசான மழையும் பெய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புயல் கரையை கடந்த சமயத்தில் 100 கி.மீ. முதல் 120 கி.மீ. வேகத்தில் காற்று வீசியுள்ளதுடன், புதன்கிழமை இரவு முதல் வியாழக்கிழமை காலை வரை கனமழை பெய்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

புயல் கரையை கடந்த சமயத்தில் புதுச்சேரியில் 7 இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதுடன், இவற்றை பேரிடர் மீட்பு குழுவினர் தீயணைப்பு படையினர் பொதுப்பணித்துறையினர் அகற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளதாகவும், இதனைத்தவிர பெரிய அளிவில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

# நிவர்புயல் கரையை கடந்தது வானிலை மையம் அறிவிப்பு!

நிவர் புயல் முழுவதுமாக கரையைக கடந்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இந்திய நேரப்படி இன்று (வியாழக்கிழமை) காலை நான்கு மணியளவில் புயல் முழுவதுமாகக் கரையைக் கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிவர் அதிதீவிர புயல் வலுவிழந்து தீவிரப் புயலாக நிலப்பகுதியில் இருக்கிறது எனவும் அடுத்த சில மணி நேரங்களில் தீவிரப் புயல் வலுவிழந்து புயலாக மாறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புதுச்சேரிக்கு வடக்கே மரக்காணம் பகுதியில் நேற்று இரவு 11.30 மணிமுதல் இன்று அதிகாலை நான்கு மணிக்குள் நிவர் புயல் முழுவதுமாக கரையைக்



கடந்துவிட்டது என தமிழக அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், 100 சதவீதம் பாதுகாப்புடன் புயலைக் கடந்திருக்கிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இன்று வடதமிழகத்தில் மழை தொடர்ந்து நீடிக்கும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# நிவர் கரையைக் கடந்த பின்பும் தமிழகத்தில் மழை தொடருமாம்!

வானிலை அவதானிப்பு நிலையம்

நிவர் புயல் கரையை கடந்த பின்னரும் தமிழகம் மற்றும் புதுவையில் நாளை வரை மழை தொடரும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிவர் புயலின் தாக்கத்தால் அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர மாவட்டங்கள் மற்றும் வடதமிழக மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்யும் என சென்னை வானிலை மையத்தின் தென்மண்டல தலைவர் பாலசந்திரன் கூறியுள்ளார்.

தமிழகம் மற்றும் புதுவையில் நாளை வரை மழை தொடரும். நாகை, தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், சென்னை காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மயிலாடுதுறை அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் புதுச்சேரி, காரைக்கால் ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பாலசந்திரன் கூறினார்.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சென்னையில் 16 சென்ரி மீற்றர் மழை பதிவாகி உள்ளது, சென்னை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெள்ளிக் கிரகம் தொடர்பான ஆய்வு: இந்தியாவுடன் சுவீடன் கைகோர்ப்பு!

இந்தியா மேற்கொள்ளும் வெள்ளிக் கிரகம் தொடர்பாக ஆய்வு திட்டமான 'சுக்ரயான்' செயற்கைக் கோள் திட்டத்தில் ஐரோப்பிய நாடான சுவீடன் இணைந்துள்ளது.

இது தொடர்பாக இந்தியாவுக்கான சுவீடன் தூதர் கிளாஸ் மோலின் தெரிவிக்கையில் –

இஸ்ரோவின் வெள்ளிக் கிரக ஆய்வுக்கான சுக்ரயான் திட்டத்தில் சுவீடன் விண்வெளி இயற்பியல் மையம் பங்கு கொள்கிறது.

சுக்ரயான் செயற்கைக் கோளில் சுவீடனின் 'வி.என்.ஏ.' என்ற கருவி பொருத்தப்படும். இது சூரியனில் இருந்து வெளிப்படும் அணுப் பொருள்களால் வெள்ளியின் வளி மற்றும் புற மண்டலங்களில் ஏற்படும் தாக்கத்தை ஆய்வு செய்வதற்கு உதவும். – எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான 'இஸ்ரோ' முதன் முறையாக வெள்ளி கிரக ஆராய்ச்சிக்கு 'சுக்ரயான்' செயற்கைக் கோளை அனுப்பவுள்ளது. வெள்ளி கிரகம் 19 மாதங்களுக்கு ஒரு முறை பூமிக்கு



நெருக்கமாக வருவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன் அடிப்படையில் 2023 ஜுன் மாதத்தில் சுக்ரயான் செயற்கைக் கோள் விண்ணில் செலுத்தப்படவுள்ளது. இது வெள்ளியின் சுற்றுவட்ட பாதையில் நிலை நிறுத்தப்பட்டு, அந்த கிரகத்தின் மேற்பரப்பு நிலப்பரப்பு தொடர்பான ஆய்வை மேற்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிவர் புயலில் சிக்கி தமிழகத்தில் மூவர் பலி!

புதுச்சேரி – மரக்காணம் இடையே அதி தீவிர புயலாக கரையைக் கடந்த நிவர் புயல் காரணமாக தமிழகத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், 3 பேர் காயமடைந்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் 3 ஆயிரத்து 85 முகாம்கள் அமைக்கப்பட்டு, 40 ஆயிரத்து 182 குழந்தைகள் உட்பட 2 லட்சத்து 27ஆயிரம் பேர் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

921 மருத்துவ முகாம்களும், 234 நடமாடும் மருத்துவ குழுக்களும் அமைக்கப்பட்டு தேவையானவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதேநேரம், ஆடுகள், மாடுகள் என 26 கால்நடைகள் நிவர் புயலுக்கு பலியாகியுள்ளன. மேலும் 14 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் சேதமடைந்துள்ளன. மேலும் மொத்தமாக 101 வீடுகள் சேதமடைந்துள்ளன என்பதுடன், வீதியோரங்களில் இருந்த 380 மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. அத்துடன், 19 மின் கம்பங்களும் சாய்ந்துள்ளன.

# 2 ஆயிரம் வீடுகளில் மழைநீர் புகுந்தது வெளியேற்ற முயற்சி!



நிவர் புயலின் தாக்கத்தால் புதுச்சேரியில் பெருமழை பெய்த நிலையில், நகரின் தாழ்வான பகுதிகளில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வீடுகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. மழைநீரை வடிய வைக்கும் பணியில் பொதுப்பணித்துறையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

வங்கக் கடலில் உருவான நிவர் புயல் நேற்றிரவு புதுச்சேரி அருகே கரையைக் கடந்தது. இதனால் மணிக்கு 145 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த சூறைக் காற்று வீசும் என எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்த்த அளவுக்குக் காற்றின் வேகம் இல்லாவிட்டாலும் அதி கனமழை பொழிந்தது.

புதுச்சேரியில் நேற்றுக் காலை முதல் இன்று காலை வரை 30 சென்ரிமீற்றர் மழை பதிவாகியுள்ளது. இதனால் புதுச்சேரி எல்லைப் பிள்ளைச் சாவடி இந்திரா சிலை சந்திப்பில் மழைநீர் குளம்போல் தேங்கியுள்ளது.

முதன்மையான சாலைச் சந்திப்பான அப்பகுதி வழியாகச் செல்லும் வாகனங்கள் தண்ணீரில் மிதந்தபடியே செல்ல வேண்டியுள்ளது. இதேபோல் சாலையையொட்டிய குடியிருப்புப் பகுதிகளையும் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இந்திரா சிலை சந்திப்பில் மழைநீர் தேங்கியுள்ளதன் கழுகுப் பார்வைக் காட்சிகளை இப்போது காணலாம்.

புதுச்சேரி ரெயின்போ நகர், வெங்கடா நகர், சுதந்திரப் பொன்விழா நகர் உள்ளிட்ட பகுதிகளில் 2 ஆயிரம் வீடுகளில் மழைநீர் புகுந்துள்ளது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையினர், மாநகராட்சி அலுவலர்கள், காவல்துறையினர் இணைந்து சாலைகளை வெட்டியும், மோட்டார்கள் மூலம் நீரை இறைத்தும் வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.

மேட்டுப்பாளையம், லால் பகதூர் சாஸ்திரி நகர், அண்ணாசாலை உள்ளிட்ட பகுதிகளில் புயலின்போது சாய்ந்தும், முறிந்தும் சாலைகளில் விழுந்த மரங்களை வெட்டி அகற்றும் பணியில் தீயணைப்புத் துறையினர் ஈடுபட்டனர்.

புதுச்சேரி உப்பளம் பகுதியில் புயலின்போது மரத்தில் இருந்து முறிந்த சிறிய கொப்பு மின்கம்பத்தில் கட்டப்பட்டுள்ள மின் கம்பியின் மீது மாட்டிக்கொண்டது. மின்துறை ஊழியர் ஒருவர் மின்கம்பத்தில் ஏறியபின் ஒரு மின்கம்பியில் கால்களை ஊன்றியும் மற்றொரு மின்கம்பியைக் கைகளால் பிடித்தபடியும் கம்பி வழியாகச் சென்று அந்த மரக்கொப்பை அகற்றிவிட்டு மீண்டும் மின்கம்பம் வழியே தரையிறங்கினார்.

புயலுக்குப் பின் மின்சாரம் வழங்குவதற்காக ஆபத்தான பணியை மேற்கொண்ட மின்துறை ஊழியரை முதலமைச்சர் நாராயணசாமி பாராட்டினார்.

# குருகலம் தமிழ்மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 27.11.2020 | வெள்ளிக்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் 12. தமிழ் |
| 05.00 - 05.55 | தரம் 13. தமிழ் |
| 06.00 - 06.55 | தரம் 12. வியாபாரக் கற்கைகள் |
| 08.00 - 08.55 | தரம் 12. வியாபாரக் கற்கைகள் |
| 09.00 - 09.55 | தரம் 12. வியாபாரக் கற்கைகள் |
| 10.00 - 10.55 | தரம் 13. வியாபாரக் கற்கைகள் |
| 11.00 - 11.55 | தரம் 12. வியாபாரக் கற்கைகள் |
| 12.00 - 12.55 | தரம் 12. பொருளியல் |
| 13.00 - 13.55 | தரம் 13. பொருளியல் |
| 14.00 - 14.55 | தரம் 13. வியாபாரக் கற்கைகள் |
| 15.00 - 15.55 | தரம் 10. தமிழ் |
| 16.00 - 16.55 | தரம் 11. தமிழ் |
| 17.00 - 17.55 | தரம் 13. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் |
| 18.00 - 18.55 | தரம் 12. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் |
| 22.00 - 23.00 | தரம் 13. தமிழ் |
| 23.00 - 24.00 | தரம் 12. தமிழ் |

# தேசிய பாதுகாப்பு முன்னாள் ஆலோசகருக்கு மன்னிப்பு வழங்கியுள்ளார் ரொனால்ட் ட்ரம்ப்!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் பிளினினுக்கு மன்னிப்பு வழங்கியுள்ளார்.

2016 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு தொடர்பான விசாரணையின்போது எவ்.பி.ஐ யிடம் பொய் சொன்னார் எனக் குற்றத்தை முன்னதாக ஒப்புக் கொண்டமையைக் கருத்திற் கொண்டே அவருக்கு ட்ரம்ப் புதன்கிழமை மன்னிப்பு வழங்கியுள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் ரஷ்ய தூதர் செர்ஜி கிஸ்லாக் உடனான 2016 தொடர்புகள் தொடர்பாக எவ்.பி.ஐக்கு தவறான அறிக்கைகளை வழங்கினார் என பிளின் 2017 இல் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

ஒபாமா ஜனாதிபதியாக இருந்தபோதும், ட்ரம்ப் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோதும் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா விதித்த பொருளாதாரத் தடைகள் தொடர்பாக மொஸ்கோவின் எதிர்வினையை மிதப்படுத்துவது பற்றி பிளின் மற்றும் கிஸ்லியாக் ஆகியோர் விவாதித்துள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்கத் தேர்தல்களில் ரஷ்யா தலையிட்ட குற்றச்சாட்டுகளை ஆராய 2017 ஆம் ஆண்டில் சிறப்பு ஆலோசகர் ரொபர்ட் முல்லர் நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## உலகக் கால் பந்து ஜாம்பவான் டியாகோ மரடோனா காலமானார்!



மிகச்சிறந்த வீரர்களில் ஒருவரான கால்பந்து ஜாம்பவான் டியாகோ மரடோனா தனது 60 வயதில் காலமாகியுள்ளார்.

இம்மாதம் மூளை இரத்த உறைவு தொடர்பாக வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சையை செய்திருந்த அவர் மாரடைப்பால் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1986 உலகக் கோப்பையை ஆர்ஜென்டினா வென்றெடுப்பதற்கு மரடோனா அந்த அணியின் தலைவராக இருந்து மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கியிருந்தார்.

இந்நிலையில், உலக மக்களிடையே அவரது மரணம் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதுடன் ஆர்ஜென்டினா கால்பந்துச் சங்கம் தங்கள் வரலாற்று நாயகன் காலமானமைக்கு ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

மரடோனா, ஆர்ஜென்டினாவுக்காக 91 போட்டிகளில் விளையாடி 34 கோல்களை அடித்துள்ளார் என்பதுடன் நான்கு உலகக் கோப்பைகளில் ஆர்ஜென்டினாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடியுள்ளார்.

## டிக்ரே மோதலில் சர்வதேச தலையீட்டை ஏற்கமுடியாது!

### எத்தியோப்பியா திட்டவட்டம்

எத்தியோப்பியாவில் மத்திய அரசுக்கும் அந்த நாட்டின் டிக்ரே மாகாணத்துக்கும் இடையிலான மோதல் விவகாரத்தில், சர்வதேச நாடுகள் தலையிடுவதை அனுமதிக்க முடியாது என்று பிரதமர் அபை அகமது திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று (புதன்கிழமை) கூறுகையில் –

எத்தியோப்பியா குறித்து நட்பு நாடுகள் அக்கறை காட்டுவதைப் பாராட்டுகிறோம்.

ஆனால், எங்களது உள்நாட்டு விவகாரத்தில் சர்வதேச தலையீட்டை ஒருபோதும் ஏற்கமாட்டோம். எனவே, அத்தகைய முயற்சிகளை எந்த நாடும் மேற்கொள்ள வேண்டாம்.

எத்தியோப்பியாவில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காகவே டிக்ரே மாகாணப் படையினருக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது எனக் கூறினார்.

முன்னதாக தங்கள் நாட்டில் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள டிக்ரே மாகாண அரசுடன் சமாதானப் பேச்சில் ஈடுபடப்போவதில்லை என்று எத்தியோப்பிய அரசு திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

எத்தியோப்பிய ஆளும் கட்சிக் கூட்டணியில் மிக முக்கிய பங்குவகித்து வந்த டிக்ரே மக்கள் விடுதலை முன்னணி (டி.பி.எல்.எவ்), நாட்டின் பிரதமராக அபை அகமது கடந்த 2018 ஆம் பிரதமராகப் பொறுப்பேற்றமையிலிருந்து மத்திய அரசை எதிர்த்து வருகிறது.

அபை அகமது தடை விதித்திருந்த தடையையும் மீறி, மாகாணத் தேர்தலை கடந்த செப்ரெம்பர் மாதம் டிக்ரே அரசு நடத்தியது.

## வைரங்கள், படிகங்கள், முத்துக்களாளான விலை உயர்ந்த சொகுசு முகக் கவசம்!



உலகம் முழுவதும் முகக்கவசம் அணியாத முகங்களே இல்லை என்ற நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

இந்த கொடிய வைரஸ் கொரோனா பரவுவதைத் தடுப்பதில் முக்கிய பங்காக சானிடிசர்கள், கையுறைகள் மற்றும் முகக்கவசங்கள் கொண்டுள்ளன.

அவ்வாறு ஜப்பான் நிறுவனம் ஒன்று மிக விலை உயர்ந்த சொகுசு முகக்கவசங்களை தயாரித்துள்ளது. அதாவது உயர்தர மக்களால் மட்டுமே இந்த முகக் கவசம் வாங்க முடியும். ஏனென்றால் அதன் விலை இந்திய ரூபாய் மதிப்பில் சுமார் 80 லட்சம் ஆகும்.

கொரோனா பாதிப்பு காரணமாக உலகம் முழுவதும் கிட்டத்தட்ட அனைத்து துறைகளும் மிகப்பெரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளன. குறிப்பாக பேஷன் இன்டஸ்ட்ரீஸ், நகை மற்றும் ஜவுளித் துறையில் மிகக் கடுமையான பாதிப்பை சந்தித்துள்ளன. அவற்றை ஊக்குவிக்கும் விதமாக இந்த விலை உயர்ந்த சொகுசு முகக் கவசங்களை தனியார் நிறுவனம் ஒன்று தயாரித்து உள்ளதாகக் கூறி உள்ளது.

கொரோனா ஊரடங்கு, பொருளாதார இழப்பு, வருமான இழப்பு உள்ளிட்ட பல காரணங்கல் சூழ்ந்துள்ள நிலையில், மக்கள் இந்த முகக் கவசங்கள் அணிகின்றமை ஓர் உற்சாகம் ஏற்படுமாம். இதில் புதியதாக 0.7 கரட் வைரங்கள், 300 இற்கும் மேற்பட்ட ஸ்வரோவ்ஸ்கி படிகங்கள் மற்றும் ஜப்பானிய வளர்ப்பு முத்துக்களான அகோயா முத்துக்கள் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன.

இது தவிர 800 இற்கும் மேற்பட்ட வகையிலான பல்வேறு முகக் கவசங்களையும் இந்த நிறுவனம் தயாரித்துள்ளது.

## எத்தியோப்பாவில் மூன்று வாரங்களாக நடைபெற்ற போரில் 10 ஆயிரம் பேர் பலி!

எத்தியோப்பியாவின் வடக்கு பிராந்தியத்தில் மூன்று வாரங்களாக இடம்பெற்ற மோதலில் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என அந்நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது.

வடக்கு பிராந்தியத்தில் மத்திய அரசின் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் டைக்ரேயன் பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தினர் எனக் கூறப்பட்டது

இதனை அடுத்து எத்தியோப்பிய பிரதமர் அபி அகமது பிராந்திய அரசாங்கத்துக்கு எதிராக தாக்குதலை ஆரம்பித்தமையை அடுத்து நவம்பர் 4 முதல் கடும் மோதல் இடம்பெற்று வருகின்றது.

அப்போதிருந்து, டைக்ரேவுக்கான தொலைபேசி மற்றும் இணைய இணைப்புகள் குறைக்கப்பட்டமையால் அந்தப் பகுதிக்கான அணுகல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் எனவும், பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர் எனவும் நம்பப்படுவதுடன், இரு தரப்பினரும் பொதுமக்கள் மீது அட்டூழியங்களைச் செய்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நவம்பர் 9 ஆம் திகதி மாய் கத்ராவில் நடந்த கொலைகள் தொடர்பாக மூன்று நாள்களுக்குப் பிறகு மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு சர்வதேச மன்னிப்புச் சபையால் முதலில் அறிக்கையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுப்பாடுகள் தளர்த்த தீர்மானிக்கப்பட்ட ஜேர்மனியில் மேலும் 410 இறப்புக்கள்!

கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த கடந்த 24 மணி நேரத்தில் ஜேர்மனியில் 410 இறப்புக்கள் பதிவாகியுள்ளன.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலத்தில் கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பாக பேச ஜேர்மனியின் 16 மாநில முதல்வர்களுடன் சந்திப்புக்கு முன்னர் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மேலும் புதிதாக 18 ஆயிரத்து 633 பேருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நாடு முழுவதும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 லட்சத்து 61 ஆயிரத்து 320 ஆக அதிகரித்துள்ளது.

இறப்பு எண்ணிக்கை 410 ஆக உயர்ந்ததை அடுத்து மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 14 ஆயிரத்து 771 ஆக உயர்ந்துள்ளது. இந்த எண்ணிக்கை ஒரு வாரத்திற்கு முன்பு 305 ஆக இருந்தது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய முடக்கம் டிசெம்பர் 20 வரை நீடிக்க மத்திய மாநிலங்கள் நேற்று புதன்கிழமை முடிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் ஜோ பைடனுக்கு வாழ்த்து!



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற ஜோ பைடனுக்கு சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தேர்தல் முடிவுகள் சில மாநிலங்களில் இழுபறி நிலைக்குப் பின்னரே அறிவிக்கப்பட்ட நிலையில், குறித்த தேர்தலில் வெற்றிபெற்ற ஜோ பைடனுக்கு சீனா ஜனாதிபதி வாழ்த்துத் தெரிவிக்கவில்லை.

இதனிடையே, சீனா தரப்பில் தேர்தல் முடிவுகள் வெளியாகிய சில நாள்களுக்குப் பின்னர் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் இது தொடர்பாக மௌனம் காத்த நிலையில், இறுதியாக இன்று அவர் பைடனுக்கு வாழ்த்து தெரி வித்துள்ளார்.

அத்துடன், சீனா – அமெரிக்க உறவுகளின் ஆரோக்கியமான மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பது இரு நாடுகளிலும் உள்ள மக்களின் அடிப்படை நலன்களுக்கு உதவும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்யாணமாலை
வட சர்வதேச
திருமண சேவை



| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1991.10.17 | பிறந்த திகதி - 1990.06.14 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - திருவோணம் | நட்சத்திரம் - சதயம் |
| பாவம் - 26 | பாவம் - 31 1/2 |
| செவ் - 08இல் | சூ/செவ் - ------ |
| கல்வி - பொறியியலாளர் | கல்வி - பட்டதாரி Bsc |
| தொழில் - கனடா PR | தொழில் - ஆசிரியை |
| எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண் தேவை | எதிர்பார்ப்பு - பட்டதாரி உத்தியோகம் தேவை |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

# நினைவேந்தலைத் தடுக்கும் இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நாவின் இரு சிறப்பு அறிக்கையாளர்களிடம் முறையீடு!

## முறைப்படி செய்தது நாடு கடந்த தமிழீழ அரசு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.26

போரில் இறந்தவர்களுக்கு மரியாதை செய்வது என்பது சர்வதேச மனிதவுரிமைச் சட்டங்களின் படி - குறிப்பாக மானிட கண்ணியத்துக்கான உரிமையின் படி - பாதுகாக்கப்பட்டுள்ள போதும், மாவீரர் நாளுக்கு இலங்கை அரச கட்டமைப்புக்கள் விதித்துள்ள தடைகள் தொடர்பில் ஐ.நாவின் இரண்டு சிறப்பு அறிக்கையாளர்களின் கவனத்துக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கொண்டு சென்றுள்ளது.

ஒன்றுகூடும் சுதந்திரத்துக்கான சிறப்பு அறிக்கையாளர், கருத்துச் சுதந்திரத்துக்கான சிறப்பு அறிக்கையாளர் ஆகியோரின் கவனத்துக்கு சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களுக்கான வல்லுனர்கள் Global Diligence LLP filed மையத்தின் ஊடாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இந்த நடவடிக்கையினை எடுத்துள்ளது.

முன்னர் தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு சிறிலங்கா அரச கட்டமைப்புக்கள் விதித்த தடை தொடர்பிலும், இவ்வாறான முறைப்பாட்டை ஐ.நாவின் இவ்விரு சிறப்பு அறிக்கையாளர்களின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்ததோடு, இது தொடர்பில் இலங்கை அரசு தனது கடுமையான எதிர்வினையை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துக்கு எதிராக வெளிப்படுத்தியிருந்தது.

இந்நிலையில் அதன் தொடர்ச்சியாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், மாவீரர் நாளுக்கு விதிக்கப்பட்டு வரும் தடைகள் தொடர்பில் ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர்களுக்கு மேற்கொண்ட முறையீட்டில் -

இலங்கைத் தீவில் சிங்கள பௌத்த பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவே தமிழர்கள் ஆயுத வழியிலும், அமைதி வழியிலும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். 'மாவீரர் நாள்' என்பது இத்தகைய அரச பயங்கரவாத அடக்குமுறையை எதிர்த்துப் போராடி உயிர்நீத்தவர்களை நினைவேந்துவதற்காக நடத்தப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் களப்பலியான மாவீரன் லெப்டினண்ட் சங்கர் உயிர்நீத்த நாளே மாவீரர் நாளாக ஆண்டுதோறும் தமிழ் மக்களால் நினைவேந்தப்படுகின்றது.

தமிழ்மக்களின் மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு தடைகளை விதிப்பதும், அச்சுறுத்துவதும் ஐ.நாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய பன்னாட்டு ஒப்பந்தத்தின் முறையே உறுப்பு 21 மற்றும் 19ல் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ள ஒன்றுகூடும் உரிமையையும் பேச்சுரிமையையும் மீறுவதாகும். - என்று முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பயங்கரவாத பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளை இட்டிருப்பதானது, நினைவேந்தும் செயல்கள் உறுப்பு 21இன் கீழ் சொல்லப்படும் கட்டுத்தளைகளுக்கு இடம்தரா விட்டால், இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த விடாமல் மக்களைத் தடை செய்வதை நியாயப்படுத்த முடியாது எனவும் முறையீட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

போரில் இறந்தவர்களுக்கும் அவர்களின் கல்லறைகளுக்கும் மரியாதை செய்வது என்பது சர்வதேச மனிதவுரிமைச் சட்டங்களின் படி, குறிப்பாக மானிட கண்ணியத்துக்கான உரிமையின் படி பாதுகாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக்கான சுகாதார கட்டுப்பாடுகளை காரணங்காட்டி, தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளை பறிக்கும் வகையில் அதனை தவறாக இலங்கையின் அரச கட்டமைப்பு பயன்படுத்தி வருவதாக மீளவும் ஐ.நாவுக்கு சுட்டிக்காட்டியுள்ள இந்த முறையீட்டில், நினைவேந்தலைத் தடை செய்யும் நீதிபதிகளின் முடிவுகள் என்பது தமிழர்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறையிலும், இனப் பாகுபாட்டிலும் வேர் கொண்டிருக்கக் காணலாம் எனவும் தெரிவித்துள்ளது.

நீதிமன்றங்களின் தடைக்கு அடிப்படையாக இருப்பது 'பங்கேற்பாளர்களின் இன அடையாளமும் அதிகாரிகளோடு அவர்களுக்குள்ள உறவுமே' ஆகும். காவல்துறையும் நீதிபதிகளும் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துவது 'பாகுபாடான உரிமைமீறலும் தாக்குதலும்' ஆகும். 'சட்டங்களும் அவற்றுக்கான பொருள்விளக்கமும் பயன்பாடும் அமைதியான முறையில் ஒன்றுகூடும் உரிமையைத் துய்ப்பாட்டைத் தோற்றுவிக்காத படி இலங்கை உறுதி செய்ய வேண்டும்.'

மாவீரர் நாள் நினைவேந்தலைப் பொறுத்த வரை அமைதியாக நினைவேந்தும் - கூட்டங்கூடும் - உரிமையையும் கருத்துரிமையையும் 'மதிக்கவும் உறுதி செய்யவும்' வேண்டிய கடமையை இலங்கை மீறுவது தெளிவாகத் தெரிகிறது எனவும் ஐ.நா சிறப்பு அறிக்கையாளர்களுக்கான முறையீட்டில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச போர் நியமங்களுக்கு மாறாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் கல்லறைத் தோட்டங்கள் இலங்கை ஆக்கிரமிப்புப் படைகளினால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளதோடு, சர்வதேச கடப்பாடுகளுக்கு கட்டுப்படாத நிலையே காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கது.

# 5 வருடங்களில் 500 ஊடகவியலாளர் தொழிலை இழந்து தவிக்கின்றார்கள்!

கொழும்பு, நவ. 26

கடந்த 5வருடங்களில் 500 ஊடகவியலாளர்களுக்கு தொழில் இல்லாமல் போயுள்ளதுடன் அவர்களில் அதிகமானவர்களுக்கு ஒருசத மேனும் நஷ்ட ஈடும் கிடைக்கப்பெறவில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தில் ஊடகத்துறை, வெளிவிவகார அமைச்சுக்கள் மற்றும் பிராந்திய உறவுகள் அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

மக்களின் உணர்வுகள் மதிக்கப்படவேண்டும். அவர்களின் கோரிக்கைகள் தொடர்ந்து நிராகரிக்கப்படும்போது அவர்கள் இறுதிக்கட்டமாக வீதிக்கிறங்கி போராட ஆரம்பிப்பார்கள். அதன் அடிப்படையிலே கொழும்பு முகத்துவாரம் பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் மக்களுக்கு போதுமான எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை என அவர்கள் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் இறுதியாக வீதிக்கிறங்கி போராட ஆரம்பித்தனர்.

ஆனால் அவர்களின் போராட்டத்தின் மூலம் அவர்களின் கோரிக்கைகளை அதிகாரிகளுக்கு எடுத்துச்சொல்லும் பொறுப்பு ஊடகங்களுக்கே இருக்கின்றன. என்றாலும் அந்த மக்களின் போராட்டத்தை ஒரு சில ஊடகங்களே வெளிப்படுத்தியிருந்தன. இது கவலைக்குரிய விடயமாகும்.

அதேபோன்று கொவிட் தொற்றுக்கு ஆளாகிய நபர் ஒருவரை சுகாதார பிரிவினர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும்போது, பாரிய குற்றவாளியை எடுத்துச்செல்வது போன்றே சில ஊடகங்கள் அதனை வெளிப்படுத்துகின்றன. இது அவர்களுக்கு போதுமான பயிற்சி இல்லாமையே காரணமாகும். அதனால் ஊடகவியலாளர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்.

மேலும் கொவிட் காரணமாக ஊடகவியலாளர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஊடகத்துறையில் இருப்பவர்களில் அதிகமானவர்கள் சுயாதீன ஊடகவியலாளர்களாகும். அவர்களின் வாழ்வாதாரம் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும்.

கடந்த 5 வருடத்தில் 500 ஊடகவியலாளர்கள் தங்களின் தொழிலை இழந்துள்ளனர் என இணையத்தளம் ஒன்று மேற்கொண்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அவர்களில் அதிகமானவர்களுக்கு ஒரு சதமேனும் நஷ்ட ஈடு கிடைத்ததாக இல்லை.

அதனால் ஊடகவியலாளர்களின் அர்ப்பணிப்பான சேவையைக் கருத்திற்கொண்டு அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோன்று அவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் ஒன்றையும் அறிமுகப்படுத்த வேண்டும். - என்றார்.

# தமிழகக் கரையை அடைந்தது 'நிவர்'!

## பல பகுதிகளுக்கும் மழை எச்சரிக்கை

நிவர் சூறாவளியின் தாக்கம் இன்று (வியாழக்கிழமை) முதல் குறைவடையக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் விருத்தியடைந்த நிவர் என்ற சூறாவளியானது தமிழகக் கரையை ஊடறுத்து வடமேல் திசையில் நகர்வதாக அந்தத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்காரணமாக வடமேல், மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் யாழ்ப்பாணம், மன்னார், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழையுடனான வானிலை நிலவுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையுடனான வானிலை நிலவுமென அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இடியுடன் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகும் சந்தர்ப்பங்களில் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதேவேளை, நிவர் புயல் முழுவதுமாக கரையைக் கடந்துள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இந்திய நேரப்படி இன்று காலை நான்கு மணியளவில் புயல் முழுவதுமாக கரையைக் கடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரணிப்பவர்களைத் தகனம் செய்ய ரூ. 58 ஆயிரம் வழங்கவேண்டுமா?

## முஜிபுர் ரஹ்மான் சபையில் கேள்வி



கொரோனாவால் மரணிப்பவர்களின் இறுதிக்கிரியைக்கு பெட்டியை பெற்றுக் கொள்ள வசதி இல்லாதவர்களுக்கு அதனை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கின்றோம் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவிக்கையில் -

கொவிட் மரணங்களில் அதிகமானவை கொழும்பிலேயே இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வாறு மரணிப்பவர்களை தகனம் செய்வதற்காக கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில் 58 ஆயிரம் ரூபா அறவிடப்படுவதாக சமூக வலைத்தளங்களில் பரவலாக செய்தி வெளியிடப்படுகின்றது. இதன் உண்மை நிலை என்ன எனக் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே சுகாதார அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

கொவிட் காரணமாக ஒருவர் மரணித்தால் அதனை தகனம் செய்வதற்கான செலவினங்களை மரணித்தவரின் குடும்பமே மேற்கொள்கின்றது.

குறிப்பாக சடலத்தை எந்தவகையான பெட்டியை பெற்றுக்கொள்வது, எங்கிருந்து பெற்றுக்கொள்வது போன்ற விடயங்களை அந்த குடும்பமே மேற்கொள்கின்றது.

இறுதிக்கிரியை மேற்கொள்ள பெட்டியை பெற்றுக்கொள்ள வசதி இல்லாதவர்களுக்கு அதனை பெற்றுக்கொடுக்க நன்கொடையாளர்களுடன் கதைத்து தேவையான வசதிகளை செய்துகொடுக்கின்றோம். - என்றார்.

# நீராடச் சென்ற இரு சிறுவர் பரிதாப பலி!

ஹிக்கடுவ - தொடகமுவ பகுதியில் இரு சிறுவர்கள் நீரில் மூழ்கி நேற்று மாலை உயிரிழந்துள்ளனர்.

ஹிக்கடுவ - தொடகமுவ பாலத்திற்கு அருகில் உள்ள குளத்தில் நீராடுவதற்காக சென்ற போது இரண்டு சிறுவர்களும் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 7 மற்றும் 8 வயதுடைய இரு சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.11.2020 இல் வெளியிடப்பெற்றது.